1995 நவம்பர் 2]

(ஆ) சட்டமன்ற மேலவை முன்னாள் தலைவர் மற்றும் பேரவை முன்னாள் உறுப்பினர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் முன்னாள் தலைவரும் மற்றும் இச்சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினருமான டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்களது மறைவு குறித்தும், இப்பேரவையின் உறுப்பினரான திரு. அ. செல்வராசன் அவர்களது மறைவு குறித்தும், இரங்கல் தீர்மானங்களை மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இப்போது முன்மொழிவார்கள்.

முற்பகல் 10–10

***மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காகப் போராடியவரும், சிறந்த காந்தியவாதியும், தமிழுக்காகத் தன்னை முழுக்க முழுக்க ஒப்படைத்துக் கொண்டவரும், இப்பேரவையின் உறுப்பினராகத் திகழ்ந்தவரும், தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தலைவராகச் செயலாற்றியவரும் அனைத்துத் தரப்பினராலும், 'சிலம்புச்செல்வர்' என அன்புடன் அழைக்கப்பட்டவருமான டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தனது 90–வது வயதில் 3–10–1995 அன்று மறைவுற்றது இப்பேரவைக்கு ஆற்றொணாத் துயரத்தை அளிக்கிறது.

மறைந்த டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் 1906–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26–ஆம் நாளன்று பிறந்தார். அண்ணல் காந்தியடிகளின் கொள்கையால் ஈர்க்கப்பட்டு 1927–ஆம் ஆண்டு காங்கிரஸ் பேரியக்கத்தில் சேர்ந்தார். இந்திய விடுதலைக்காக ஆறு முறை சிறைத்தண்டனை பெற்றார். பள்ளி சென்று முழுக்கல்வி கற்காத நிலையிலும் தமிழ் ஆர்வத்தோடும் பற்றோடும் தமிழ் இலக்கியங்களில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார். தமிழகத்தில் தமிழை ஆட்சி மொழியாக்குவதற்கும், கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தமிழ் மொழியைப் பயிற்றுவிப்பு மொழியாக்குவதற்கும் போராடினார். 1954–ஆம் ஆண்டில் தமிழரசுக் கழகத்தை நிறுவிய அவர் திருத்தணி, தேவிகுளம் மற்றும் பீர்மேடு போன்ற பகுதிகளை தமிழக எல்லைக்குள் கொண்டுவர பெரும் போராட்டம் நடத்தி, அதன் காரணமாக சிறைத்தண்டனையும் பெற்றார். சிறந்த எழுத்தாளராகத் திகழ்ந்த அவர் 141 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான

சிலப்பதிகாரத்தில் அவருக்கு இருந்த ஈடுபாடு கண்டு பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களால் 'சிலம்புச் செல்வர்' என்று பட்டம் அளிக்கப்பெற்றார். அவரது 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' என்னும் நூல் படைப்பிற்காக 1966-ல் அவருக்கு மத்திய சாகித்ய அகாடமி விருது கிடைக்கப்பெற்றது.

மேலும் 1972-ஆம் ஆண்டில் குடியரசுத் தலைவரால் 'ப்த்ம ஸ்ரீ' விருது வழங்கப் பெற்றார். 'கலைமாமணி', 'இயற்றமிழ்ச் செல்வர்', 'பேரவைச் செல்வர்' ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ளதோடு, 'யுனெஸ்கோ' நிறுவனத்தின் நற்சான்றிதழையும், சென்னைப் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றால் டாக்டர் பட்டமும் வழங்கப் பெற்றார். 1948 முதல் 1955 வரை சென்னை மாநகராட்சியின் ஆல்டர் மேனாகவும், பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சிப் பேரவை மற்றும் ஆட்சிக் குழுக்களில் உறுப்பினராகவும் பதவி வகித்த பெருமை கொண்டவர். அவரது தமிழ் படைப்புகள் பல பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக் கழக மேல்பட்டப் படிப்பிற்காக பாட நூல்களாக வைக்கப் பெற்றுள்ளன.

தொழிலாளர் இயக்கம், சமூகப் பணி, காந்தியப் பணி, நூலக இயக்கம், கல்வித் தொண்டு, பத்திரிகைப் பணி, தமிழிசைப் பணி ஆகியவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு அரும் பெரும் பணிகள் பல ஆற்றி தன்னிகரற்றவராகத் திகழ்ந்த அவர், தனது அரசியல் வாழ்வில் 1952-ஆம் ஆண்டு முதல் 1954-ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவையின் உறுப்பினராகவும், 1967-ஆம் ஆண்டு முதல் 1971-ஆம் ஆண்டு வரை சென்னை தியாகராய நகர்த் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெற்று இப்பேரவையின் உறுப்பினராகவும், 1972-ஆம் ஆண்டு முதல் 1978-ஆம் ஆண்டு வரை சட்டமன்ற மேலவைத் துணைத் தலைவராகவும் 1978-ஆம் ஆண்டு முதல் 1986-ஆம் ஆண்டு சட்டமன்ற மேலவை கலைக்கப்படும் வரை சட்டமன்ற மேலவைத் தலைவராகவும் திறம்படச் செயலாற்றி உள்ளார்.

அன்னாரது மறைவு குறித்து அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கும், அவர் மீது பற்றுக் கொண்ட அன்பர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் பரிவையும் தெரிவித்துக் கொள்கிறது"

என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.